அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 01/98

எனது இல: தா/111/2/1/-3

அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சுதக்கம்.
கொழும்பு-07.
1998-01- 23ஆந் தேதி.

அமைச்சின் செயலாளர்களுக்கும்
மாகாண அமைச்சுக்களின் பிரதம செயலாளர்கள்.
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்!

## வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் யுத்த நிலைமைகள் யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து சேவைக்கு சமூகமளிக்க முடியாத அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட விடுமுறை.

தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவின் பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுவதுடன் அந்தப் பிரிவிற்கு 12:14 எனும் வகையில் புதிதாக உப பிரிவொன்றைச் சேர்ப்பதன் மூலம் தாபன விதிக்கோவை திருத்தம் செய்யப்படுகிறது.

12:14 அனுமதிக்கப்பட்ட விடுமுறையில் தனது சேவை நிலையத்தை விட்டகன்றிருக்கின்ற எவரேனும் ஓர் உத்தியோகத்தர் அரசாங்க பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படுகின்ற யுத்த நடவடிக்கைகளின் காரணமாக அவ்விடுமுறையின் இறுதியில் தனது சேவை நிலையத்திற்கு குறிப்பிட்ட தினத்தில் சமூகமளிக்க முடியாது போகின்ற சந்தர்ப்பங்களில் இந்தப் பிரிவின் படி விசேட விடுமுறை வழங்க முடியும். இந்த விடுமுறை அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் விடுமுறைக்கு அனுமதி அளிக்கும் உத்தியோகத்தர் தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு அப்பிரதேச நிலைமைகள் பற்றிய உண்மை நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

02. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 1996-01-01 ஆந் திகதி முதல் அமுலுக்குவரும்.

ஒப்பம்/டிக்சன் நிலவீர
செயலாளர்.

அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

vad/2/w